# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

## பேச்சுப் போட்டி 2022

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

## ஆண்டு 7

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

நடுவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் , அவையோருக்கும்
என் அன்பான வணக்கம் !

### தமிழ் மொழியின் சிறப்பு




நமது எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு அறியச் செய்வது மொழியாகும். நமது தாய்மொழியின் பெயர் “தமிழ்”.

தமிழ் மொழி பேசுவதற்கு எளிமையானது. கேட்பதற்கும் இனிமையானது. தமிழ் இலக்கியங்கள் ஓசை நயம், சொல்வளம் , பொருட் செறிவு கொண்டவை. “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் ” என்று தமிழ் மொழியின் இனிமையை சுப்பிரமணிய பாரதியார் வியந்து பாடியுள்ளார்.

“தமிழ்” என்பதற்கு “அழகு” எனவும் பொருள் உண்டு.

தமிழ் மொழி மிகவும் வளமானது. அது காலத்திற்கேற்ப மாற்றங்களைப் பெற்றுத் தன்னை நிகழ் நிலைப் படுத்திக் கொள்ளும். தமிழ் மொழி பேசவும் வாசிக்கவும் எழுதவும் வசதியான மொழி.

தமிழ் மொழி, இலக்கிய , இலக்கண வளம் நிறைந்த மொழி , சொல்வளம் மிக்க மொழி.

தமிழ் மொழியை செம்மொழி என்றும் கூறுவார்கள். தமிழ் உயர்ந்த மொழி, தனித்த மொழி, செம்மையான மொழி என்பது இதன் பொருள்.

தமிழுக்கு முத்தமிழ் எனும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்ட சிறப்பிற்குரிய மொழி இதுவாகும். முத்தமிழானது மனிதர்களின் எண்ணம், உள்ளம், உணர்வு ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்து வாழ்வை நல்வழிப்படுத்துகிறது,

இத்தகைய காலத்தால் அழியாத, செழுமையும் செம்மையும் உடைய தமிழ் மொழியைக் கற்பதால் நாம் பெருமை அடைவோம். இப்பெருமைக்குரிய தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பங்காற்றுவோம்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. நிர்மலா திலகரட்ணா.
ஆசிரியர் திருமதி. கௌரிஉஷா சந்திரசேகர்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.